


**31.05.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. மறைமுக போரை எந்த வடிவிலும் இந்தியா பொறுத்துக் கொள்ளாது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

2. தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவினர் உலகநாடுகளிடம் இன்று விரிவாக எடுத்துரைக்கின்றனர்.

3. மதுரையில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் பங்கேற்கிறார்.

4. தமிழகத்தில் கோவிட் பரவல் குறித்து மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை என மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

5. சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் ரான்கி ரெட்டி, சிராக் ஷெட்டி இணை - மலேஷிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

தீவிரவாதத்திற்கு எதிராக தக்க பதிலடி வழங்குவதோடு, மறைமுக போரை எந்த வடிவிலும் இந்தியா சகித்துக் கொள்ளாது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி உறுதிபட தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச தலைநகர் போபாலில் மகளிர் ஆளுமை தொடர்பான நிகழ்ச்சியில் பங்கேற்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று துவக்கிவைத்து பிரதமர் பேசினார்.

நம்நாட்டின் மகளிர் சக்திக்கு எதிராக விடுக்கப்பட்ட சவால், பஹல்காம் தீவிரவாத தாக்குதல், தீவிரவாதிகளுக்கு மரண அடியாக திகழ்ந்ததாகவும் குறிப்பிட்டார்.

மக்களுக்கு சேவையாற்றி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதே ஆளுமையின் உண்மையான அர்த்தம் என்று பிரதமர் கூறியுள்ளார்.

இன்று துவக்கி வைக்கப்பட்ட புதிய திட்டங்கள் அனைத்தும் வளர்ச்சியை ஊக்குவித்து புதிய வேலை வாய்ப்புகளுக்கு வழிகோலும் என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

<u>அனைத்து கட்சி குழுவினர்</u>

தீவிரவாதத்தை வேரோடு களைவது தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அனைத்து கட்சி நாடாளுமன்ற பிரதிநிதி குழுவினர் உலக நாடுகளிடம் எடுத்துரைக்கும் ஒருபகுதியாக உயர்நிலை பேச்சுவார்த்தைகளும் இடம்பெறுகின்றன.

காங்கிரஸ் உறுப்பினர் திரு.சசிதரூர் தலைமையிலான அனைத்து கட்சி குழுவினர் கொலம்பியாவில் அந்நாட்டு வெளியுறவு துணையமைச்சர் திருமதி. ரோஸா யோலாண்டவுடன் ஆசிய பசிபிக் விவகாரங்களை கையாள்வது குறித்து ஆலோசித்தார்.

பாகிஸ்தானிற்கு இரங்கல் தெரிவித்து கொலம்பியா வெளியிட்ட அறிக்கை குறித்து இந்தியாவின் அதிருப்தியை அவர் பதிவுசெய்தார்.

இந்த அறிக்கை விலக்கிக்கொள்ளப்பட்டதாக கொலம்பியா நாட்டு அமைச்சர்கள் தெரிவித்ததோடு, இந்தியாவின் நிலைப்பாடை தற்போது நன்கு உணர்ந்து கொண்டிருப்பதாகவும், இந்தியாவின் முயற்சிகளுக்கு வலுவான ஆதரவு அளிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளதாகவும் திரு. சசிதரூர் தமது வலைதளபதிவில் தெரிவித்துள்ளார்

சிவசேனா உறுப்பினர் டாக்டர் ஸ்ரீகாந்த், ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான குழுவினர் சியாரா, லியோன் நாட்டு பிரதிநிதிகளிடம் தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் பூஜ்ஜிய சகிப்புத்தன்மை குறித்து எடுத்துரைத்தனர்.

இந்தியாவிற்கான தங்களது ஆதரவை வெளிப்படுத்தும் வகையில் அந்நாட்டு நாடாளுமன்றத்தில் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதோடு அச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் நினைவாக மௌனம் அனுசரிக்கப்பட்டது.

திமுக உறுப்பினர் திருமதி கனிமொழி தலைமையிலான குழுவினர் லாட்வியா நாட்டின் இந்திய வம்சாவளியினரை சந்தித்து பேசினார்கள்.

இக்குழுவினரை வரவேற்கும் வகையில் சிந்தூர் மரியாதை அளிக்கப்பட்டது.

இதனிடையே நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. சுப்ரியா சுலே தலைமையிலான குழு அடிசபாபா இன்று சென்றடைந்தது.

எத்தியோப்பியா நாட்டின் உயரதிகாரிகளை சந்தித்து தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாடு குறித்து இக்குழுவினர் எடுத்துரைக்க உள்ளனர்.

❖❖❖❖❖❖❖❖

ராஜேஷ் குமார்சிங்

பாதுகாப்புத் துறையில் தன்னிறைவை எட்டுவது, சுயாட்சி முறையை பாதுகாப்பதோடு, வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட வழிகோலும் என்று பாதுகாப்பு செயலர் திரு. ராஜேஷ் குமார் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்பு மாநாட்டில் உரையாற்றிய அவர், 2015-ம் ஆண்டு தளவாடங்களை இறக்குமதி செய்த இந்தியா, தற்போது முன்னணி ஏற்றுமதி நாடாக முன்னேறியுள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

தற்போது பல்வேறு தொழில் நிறுவனங்கள், ஏவுகணைகள், ராக்கெட் ஏவு வாகனங்கள், நவீன போர் விமானங்கள், கப்பல்கள் உள்ளிட்டவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாக குறிப்பிட்டார்.

ஆராய்ச்சி மேம்பாட்டு துறையில் தனிகவனம் செலுத்தி முதலீடுகளை ஈர்க்க தனியார் நிறுவனங்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் மதுரையில் இன்றுமாலை சாலைப்பேரணியில் பங்கேற்கிறார்

தொடர்ந்து நாளை அங்கு நடைபெறும் கட்சியின் பொதுக்குழு கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார்.

தமிழகத்தில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்படும் என தெரிகிறது.

❖❖❖❖❖❖❖❖

அர்ச்சனா பட்நாயக்

இதனிடையே சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்காளர் பதிவு அதிகாரிகளை இந்திய தலைமை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

இது தொடர்பான பட்டியலை இன்று வெளியிட்ட தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திருமதி. அர்ச்சனா பட்நாயக், 234 தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகளை இவர்கள் மேற்கொள்வார்கள் என்றார்.

❖❖❖❖❖❖❖❖

சுப்ரமணியன்

தமிழகத்தில் கோவிட் பரவல் குறித்த வதந்திகளை நம்பவேண்டாம் என மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், தற்போது பரவும் தொற்று வீரியமில்லாதது என்றாலும், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் முகக்கவசம் அணிதல், அடிக்கடி கை கழுவுதல் உள்ளிட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

உலக புகையிலை ஒழிப்பு தினம்

உலக புகையிலை ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

புகையிலை பழக்கத்தால் ஏற்படும் தீமைகள் மற்றும் அதிலிருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வு குறித்து நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இத்தினத்தை ஒட்டி கோவை மாவட்டத்தில் இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா இன்று தொடங்கி வைத்தார்.

பள்ளி கல்லூரிகளுக்கு அருகில் புகையிலை பொருட்களை விற்பனை செய்வதை கண்காணிக்க, குழு அமைக்கப் பட்டுள்ளதாகவும், தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

புகையிலை ஒழிப்பின் அவசியம் குறித்து திருச்சியை சேர்ந்த நுரையீரல் புனர்வாழ்வு சிகிச்சை மருத்துவர், டாக்டர் கமல் பேசுகையில

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

ஜெயகாந்தன்

தமிழ்நாட்டில் 98 கோடி ரூபாய் செலவில் 12 மாவட்டங்களில் தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும் நிலையில்,
9 மாவட்டங்களில் அவை முழுமையாக நிறைவடைந்துள்ளதாக நீர்வளத்துறை முதன்மை செயலர் திரு. ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தஞ்சை, திருவாரூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெறம்
2 சதவிகித பணிகள், விரைவில் முடிவடையும் என்றார்.

முன்னதாக மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் நடைபெறும் தூர்வாரும் பணிகளை அவர் பார்வையிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

நெல் வாய்ஸ்

திருவாரூர் மாவட்டம் திருத்துறை பூண்டியில் தேசிய நெல் திருவிழா இன்று தொடங்கியது.

174 வகையான பாரம்பரிய நெல் ரகங்கள் பல்வேறு அரங்கங்களில் இடம்பெற்றுள்ளதை ஏராளமான பார்வையிட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

குற்றாலம் வாய்ஸ்

தொடர்மழை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலைபகுதியில் தென்காசி மாவட்டம் குற்றாலத்தின் அனைத்து அருவிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் 7-வது நாளாக இன்றும் சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

தண்ணீர் திறப்பு

தேனி மாவட்டத்தில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளின் முதல்போக பாசனத்திற்கு பெரியாறு அணையிலிருந்து நாளைமுதல் 120 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது.

இதன்மூலம் உத்தமபாளையம், தேனி போடிநாயக்கனூர் தாலுக்காக்களில் 14 ஆயிரத்து 700 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

இதேபோல் கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறை பெருஞ்சாணி சிற்றார் 1, 2 அணைகளிலிருந்து நாளை தண்ணீர் திறக்கப்படவுள்ளது. 79 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இதனால் பாசன வசதிபெறும்.

❖❖❖❖❖❖❖❖

பணி ஓய்வு

திருச்சி அகில இந்திய வானொலி நிலையத்தின் கட்டுமான பிரிவு பொறியாளர் ஆர். ராஜசேகர்,

தனிச்செயலர் ஆர்.சுரேஷ்

முதுநிலை பொறியியல் உதவியாளர் குமுதவள்ளி

பொறியியல் உதவியாளர் எஸ்.செல்வகுமார்

தொழில்நுட்ப வல்லுநர் என். குமார்

தர்மபுரி வானொலி நிலைய பொறியியல் உதவியாளர் பி. ராமகிருஷ்ணன்

ஆகியோர் இன்று பணி ஓய்வு பெறுகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

கோவில்

கன்னியாகுமரி பகவதி அம்மன் திருக்கோவில் வைகாசி விசாக பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 8-ம் தேதியும், முக்கடல் சங்கமத்தில் அம்மனுக்கு ஆராட்டு நிகழ்வு 9-ம் தேதியும் நடைபெறும்

❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

சிங்கப்பூர் ஓப்பன் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ரான்கி ரெட்டி, சிராக் ஷெட்டி இணை - மலேஷியாவின் **Aaron Chia, Soh** இணையை இன்று பிற்பகல் எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

டென்னிஸ்

பாரீசில் நடைபெறும் ∴பிரென்ஞ் ஓப்பன் கிரான்ஸ்லாம் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவில் ரோஹன் போப்பண்ணா, ஆடம் இணை

மற்றும் யூகி பாம்ப்ரி, ராபர்ட் இணை 3-வது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் போலந்தின் இகா ஸ்வியாடெக், அமெரிக்காவின் சபலென்கா ஆகியோர் 4-வது சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளனர்.